TVS Supply Chain Solutions — BELIEVE IN THE POWER OF US®

Regd Office: 10 Jawahar Road, Chokkikulam, Madurai – 625 002, Tamil Nadu, India
Website: www.tvsscs.com; Email ID: investor.relations@tvsscs.com
CIN: L63011TN2004PLC054655

EXTRACT OF UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER ENDED 30 JUNE 2026

(Values in ₹ crores except share data and otherwise stated)

Particulars	Standalone				Consolidated			
	Quarter Ended			Year Ended	Quarter Ended			Year Ended
	30 June 2026	31March 2026	30 June 2025	31 March 2026	30 June 2026	31March 2026	30 June 2025	31 March 2026
	Unaudited	Audited	Unaudited	Audited	Unaudited	Audited	Unaudited	Audited
Total Income from Operations	623.86	606.35	498.50	2,125.23	3,348.83	3,042.67	2,601.05	11,040.76
Net Profit for the period / year (before Tax and Exceptional items)	10.59	16.07	4.86	32.96	32.13	30.92	194.76	274.13
Net Profit for the period / year before tax (after Exceptional items)	10.59	10.90	4.86	19.02	32.13	25.71	103.47	168.50
Net Profit for the period / year after tax (after Exceptional items)	7.96	9.89	3.30	19.90	22.48	18.36	71.16	117.02
Total Comprehensive Income for the period / year [Comprising Profit for the period / year (after tax) and Other Comprehensive Income (after tax)]	9.07	8.87	2.93	17.62	19.94	60.66	102.23	229.63
Paid-up Equity Share Capital (face value of ₹ 1 per share)	44.15	44.15	44.15	44.15	44.15	44.15	44.15	44.15
Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet of the previous year				2,613.56				1,989.35
Earnings Per Share (Not annualised for the quarterly / period								
1.Basic (face value of ₹ 1 per share)	0.18	0.22	0.07	0.45	0.47	0.40	1.60	2.59
2.Diluted (face value of ₹ 1 per share)	0.18	0.22	0.07	0.45	0.47	0.40	1.59	2.59

Note:

1) The above results were reviewed by the Audit Committee and approved by the Board of Directors in its meeting held on August 10, 2026.
2) The above is an extract of the detailed format of Financial Results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing and Other Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Financial Results for the quarter ended June 30, 2026 are available on the stock exchange websites www.bseindia.com and www.nseindia.com and on our website www.tvsscs.com.

for and on behalf of the board of directors of TVS Supply Chain Solutions Limited
Sd/-
Vikas Chadha
Managing Director
DIN: 06624266

Place : Chennai
Date : 11.08.2026

வெளிநாட்டு பங்களிப்பு திருத்த மசோதாவுக்கு எதிரான தீர்மானத்தை முன்மொழிந்தார் அமைச்சர் ராஜ்மோகன்

சென்னை, ஆக. 11–

தமிழக சட்டசபையில் இன்று பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் ராஜ்மோகன், வெளிநாட்டு பங்களிப்பு திருத்த மசோதாவுக்கு எதிரான தீர்மானம் ஒன்றை முன்மொழிந்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

''வெளிநாட்டு பங்களிப்பு (ஒழுங்குமுறை) திருத்த மசோதா, 2026, தற்போதைய வடிவில், எப்.சி.ஆர்.ஏ. பதிவு காலாவதியாகுதல், புதுப்பிக்கப்படாமை, புதுப்பிப்பு மறுக்கப்படுதல், பதிவு ரத்து அல்லது ஒப்படைக்கப்படுதல் போன்ற காரணங்களால் தொண்டு நிறுவனங்களின் சொத்துகளை அரசிடம் ஒப்படைத்தல், நிர்வகித்தல், மாற்றுதல் மற்றும் விற்பனை செய்தல் தொடர்பான விதிகள் குறித்து இம்மன்றம் ஆழ்ந்த கவலை தெரிவிக்கிறது.

இவ்விதிகள் தொண்டு நிறுவனங்களின் தன்னாட்சியையும், குறிப்பாக சிறுபான்மையினர் நடத்தும் கல்வி மற்றும் சமூகநல நிறுவனங்களின் செயல்பாடுகளையும் பாதிக்கக்கூடும். எனவே, வெளிநாட்டு பங்களிப்பு (ஒழுங்குமுறை) திருத்த மசோதா, 2026ஐ அதன் தற்போதைய வடிவில் திரும்பப்பெற்று, மாநில அரசுகள், தொண்டு, மத, கல்வி, மருத்துவ மற்றும் சமூக அமைப்புகள் உள்ளிட்ட அனைத்து பங்குதாரர்களுடனும் விரிவான ஆலோசனை நடத்துமாறு மத்திய அரசை இம்மன்றம் வலியுறுத்துகிறது.

எந்தவொரு திருத்த மசோதாவும் இயற்கை நீதி, விகிதாசாரம், சொத்துரிமைப் பாதுகாப்பு, நியாயமான எதிர்பார்ப்பு மற்றும் கூட்டாட்சித் தத்துவம் ஆகியவற்றை உறுதிசெய்ய வேண்டும். வெளிநாட்டு பங்களிப்புகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வுடன், சட்டப்பூர்வமாக செயல்படும் தொண்டு, கல்வி, மருத்துவ, மத, கலாசார மற்றும் சமூக நல அமைப்புகளின் உரிமைகளை பாதுகாக்க வேண்டும்.

எனவே, வெளிநாட்டு பங்களிப்பு (ஒழுங்குமுறை) திருத்த மசோதா, 2026ஐ அதன் தற்போதைய வடிவில் திரும்பப் பெறுமாறு மத்திய அரசை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை ஒருமனதாக வலியுறுத்துகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

சட்டசபையில் ஓ.பன்னீர்செல்வம், செங்கோட்டையன் காரசார விவாதம்

சென்னை, ஆக. 11–

நீங்கள் இடம்மாறி இருக்கிறீர்கள். அதற்காக துதி பாடத்தேவையில்லை என சட்டசபையில் தி.மு.க. எம்.எல்.ஏ.ஓ.பன்னீர்செல்வம் பேச்சுக்கு அமைச்சர் செங்கோட்டையன் பதில் அளித்தார்.

சட்டசபையில் பொது பட்ஜெட், வேளாண் பட்ஜெட் மீதான விவாதம் 3வது நாளாக இன்று தொடங்கியது. சட்டசபை கூட்டம் தொடங்கியதும் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:

த.வெ.க. அரசின் நிதி நிலை அறிக்கையில் திருப்புகிற பக்கங்கள் எல்லாம் திராவிட மாடல் அரசின் சாதனைகளே ஜொலிக்கின்றது.

தமிழக வெற்றிக்கழகம் தலைமையிலான அரசின் நிதிநிலை அறிக்கையானது ஏமாற்றத்தின் வடிவமாக உள்ளது. செய்வதை மட்டும் தான் சொல்வோம் எனக்கூறி அள்ளித்தெளித்த வாக்குறுதிகளை த.வெ.க. அரசு மறந்துவிட்டது. துறை ரீதியான கூட்டம் நடத்தி, அமைச்சரவை கூட்டம் நடத்திய பின் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. த.வெ.க. அரசு தாக்கல் செய்துள்ள நிதி நிலை அறிக்கை பெயர் மாற்றப்பட்டியல் போல் உள்ளது.

ஏமாந்து போனார்கள்

த.வெ.க. தேர்தல் அறிக்கையில் சொன்னபடி மகளிர் உரிமைத் தொகை உயரவில்லை. ஆண்டுக்கு 6 சிலிண்டர்கள் வரும் என்று பெண்கள் எதிர்பார்த்திருந்த இனிப்பான செய்தி வரவில்லை. மாணவர்களின் இடைநிற்றலை 15,000 நிதியுதவி உள்பட திட்டங்கள் அறிவிக்கப்படவில்லை. மகளிர் விடியல் பேருந்து பயணத்தை விரிவுபடுத்தி அனைத்து பேருந்துகளிலும் மகளிருக்கு இலவசம் என்ற அறிவிப்பையும் பெண்கள் எதிர்பார்த்து ஏமாந்து போயுள்ளனர்.

திருப்புகின்ற பக்கமெல்லாம் தி.மு.க. ஆட்சியின் திட்டங்களே பட்ஜெட்டில் உள்ளன.

புதிய அரசின் திட்டங்களை தேடுகிறேன், தேடுகிறேன், தேடிக்கொண்டே இருக்கிறேன். புதிய அரசின் பட்ஜெட்டில் எந்த புதிய திட்டங்களும் இல்லை என்று கூறினார்.

செங்கோட்டையன் பதிலடி

ஓ.பன்னீர்செல்வம் பேச்சுக்கு அமைச்சர் செங்கோட்டையன் பதில் அளித்து கூறுகையில், "3 மாதத்தில் சரித்திரம் படைக்க இயலாது. அப்படி நீங்கள் சரித்திரம் படைத்தால் சொல்லுங்கள். 5 ஆண்டுகளுக்குள் சொன்னவற்றை நிறைவேற்றுவோம். தூய ஆட்சியாக தவெக ஆட்சி இருக்கிறது. நீங்கள் இடம்மாறி இருக்கிறீர்கள். பரவாயில்லை.. அதற்காக இவ்வளவு துதி பாடத் தேவையில்லை என்று கூறினார்.

உடனே ஓ.பன்னீர்செல்வம் கூறுகையில், ''அந்த இடத்தை முதலில் மாற்றியவர் செங்கோட்டையன்தான்" என்றார். இதனால் அவையில் சிரிப்பலை ஏற்பட்டது. அப்போது அமைச்சர் ராஜ்மோகன், "அண்ணன் செங்கோட்டையன் இடம் மாறியபோதும் அவரின் இதயத்திற்கு அருகில் இருக்கும் நிழல் படத்தை மாற்றவே வேண்டாம் என்று சொன்னவர் எங்கள் தலைவர். ஆனால் அண்ணன் ஓபிஎஸ் பாக்கெட்டை பார்க்கும்போது இடமும் மாறி இருக்கிறது, இதயமும் மாறி இருக்கிறதோ என்றே தோன்றுகிறது என்றார்.

ஜெயலலிதா படம் எங்கே?

அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, "அண்ணன் செங்கோட்டையன் இடம் மாறி இருக்கலாம், ஆனால் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் படத்தை இன்னும் சட்டைப்பையில் வைத்திருக்கிறார். ஆனால், ஜெயலலிதாவால் 3 முறை முதல்வராக்கப்பட்டவர், அவருடைய சட்டைப்பையில் யாருடைய புகைப்படம் இருக்கிறது. தமிழ்நாட்டு மக்களுக்கு தெரியும் " என்றார்.

இதற்கு ஓ.பன்னீர்செல்வம் பதில் கூறுகையில், அண்ணா, ஜெயலலிதா, கலைஞர் ஆகியோரை கடைசி காலம் வரை எங்கள் இதயத்தில் வைத்திருக்கிறோம். படம் வைத்து ஏமாற்ற வேண்டிய அவசியம் இல்லை. தற்போது சட்டமன்ற உறுப்பினராக பேரவையில் நான் இருப்பதற்கு காரணம் ஸ்டாலின், எனவே அவர் படத்தை வைத்துள்ளேன்.

திராவிட இயக்கத்தை சுற்றித்தான் என் நிலை இருக்கும், நான் எப்படிப்பட்டவன் என அனைவருக்கும் 200% தெரியும். பயிர்க்கடன் முழு தள்ளுபடி, பழைய ஓய்வூதிய திட்டம் அறிவிப்பு வரவில்லை. வாக்குறுதிகள் தேர்தல் அறிக்கையிலேயே தூங்கி கொண்டிருக்கின்றன. கடன் வாங்காமல் 50 ஆண்டுகளுக்கு ஆட்சி செய்ய முடியாது என்கிறார் நிதித்துறை செயலாளர். தேர்தல் பிரச்சாரத்தில் பேசியது தவறு என முதலமைச்சருக்கு இப்போது தெரிந்திருக்கும் என்றார்.

'நீட்' தேர்வுக்கு எதிராக அரசினர் தனித் தீர்மானம் நிறைவேறியது

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

வாய்ப்பை பறிக்கும், மாநிலங்களின் தனித்துவத்தை புறக்கணிக்கும் எந்த முயற்சியையும், எந்த ஒரு தேர்வையும் ஏற்க முடியாது என்பதே இந்த அரசின் நிலைப்பாடாகும். 'நீட்' தேர்வு தான் மருத்துவப்படிப்பின் தகுதிக்கான அளவீடு என்று நினைக்கவே தேவையில்லை' நீட் தேர்வில் தேர்ச்சி பெற இயலவில்லை என்றால் அந்த மாணவர்கள் தகுதி குறைபாடு உள்ள மாணவர்கள் என்று அர்த்தம் கொள்ளத் தேவையில்லை. ஆனால் நீட் தேர்வில் தேர்ச்சி பெறாமல் போனால் அதை குறைபாடாக கருதி மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகும் சூழலும் ஏற்படுகிறது. சிலர் தங்களது உயிரை மாய்த்துக் கொண்ட துயர சம்பவம் தமிழ்நாட்டில் நடந்தது.

இந்த சட்டமன்றம் ஏற்கனவே பலமுறை நீட் தேர்வுக்கு விலக்குக் கோரி தீர்மானம் நிறைவேற்றி உள்ளது. சட்ட முன்வடிவும் நிறைவேற்றி அனுப்பி உள்ளது. அவை அனைத்தும் தமிழக மக்களின் ஜனநாயகத்தை பிரதிபலிப்பவை. இந்த பேரவையின் ஒருமித்த குரலை மத்திய அரசு மதிக்க வேண்டும். உரிமையை மதிப்பது கூட்டாட்சியின் தத்துவமாகும். தமிழ்நாட்டில் கல்வி முன்னேற்றத்தையும் மருத்துவ மாணவர் சேர்க்கையும் பாதுகாக்க வேண்டிய காலத்தின் கட்டாயமாகும்.

நீட் தேர்வில் இருந்து மாநிலத்திற்கு விதிவிலக்கு அளிக்கும் வகையில் தமிழ்நாடு இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான செயற்கை சட்டம் முன்வடிவை தமிழ்நாடு சட்டமன்ற பேரவை 2021 ஒரு மனதாக நிறைவேற்றி இருந்தும் குடியரசு தலைவரால் அந்த சட்ட முன் வடிவின் ஏற்பு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

12 ஆம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையில் மாணவர் சேர்க்கை

2020 மே 3 நடைபெற்ற நீட் தேர்வானது தேர்வுத்தாள் கசிந்த காரணத்தால் நிறுத்தி வைக்கப்பட்டது. பின்னர் மறு தேர்வு நடத்தப்பட்டது. தேர்வு தாள் முன்கூட்டியே வெளியானதால் தேர்வின் நேர்மை குறித்து நாடு முழுதும் கேள்வி எழுந்துள்ளது. அதனை தொடர்ந்து நடைபெற்ற போராட்டத்தின் விளைவாக மத்திய கல்வி அமைச்சர் தனது பதவியை ராஜினாமா செய்தார். தேர்வு அமைப்பை முழுமையாக சீர்படுத்த குழு ஒன்றை மத்திய அரசு அமைத்துள்ளது.

முதலமைச்சர் 11வது நிதி ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, நீட் தேர்வு பாதிப்புகள் குறித்து சுட்டிக்காட்டி, தமிழக அரசின் எதிர்ப்பையும் தெரிவித்து, 12 ஆம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையில் மாணவர் சேர்க்கை நடைபெற வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். இதற்கான சட்டங்களை திருத்தி அமைத்து நீட் தேர்வை ரத்து செய்து பனிரெண்டாம் வகுப்பு பொது தேர்வு மதிப்பெண் அடிப்படையில் மாநில அரசே மருத்துவ சேர்க்கை அமைத்துக் கொள்ளவும், இந்த பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு கல்வியை மாநில பட்டியலுக்கு மாற்றுவதுதான். ஆனால் அந்த மாற்றம் செய்யப்படும் வரை இடைக்கால தீர்வாக ஒரு புதிய சிந்தனையை ஆட்சிக்கு வரும் முன்னேற முதலமைச்சர் கல்வியாளர்களுடன் பரிசீலனை செய்து ஒரு தீர்வை முன்வைத்துள்ளார்.

கல்வித்துறையில் மாநிலங்கள் இயற்றும் சட்டங்களுக்கு சிறப்பு முன்னுரிமை வழங்கும் வகையில் பொது பட்டியலில் கூடுதலாக ஒரு பிரிவை உருவாக்கலாம் என்ற ஒரு கருத்தை வைத்துள்ளார். ஒரு ஆக்கபூர்வமான விவாதம் நடந்தால் நிச்சயம் நல்ல வழி பிறக்கும் என்பது முதல்வரின் எண்ணமாகும்.

அரசியல் கோரிக்கை அல்ல

இன்று நாம் இந்த தீர்மானத்தின் மூலம் வைக்கும் கோரிக்கை அரசியல் கோரிக்கை அல்ல. இது தமிழக மாணவர்களின் எதிர்கால நலனுக்கான கோரிக்கை. சமூக நீதி குறித்த கோரிக்கை. இது அரசியலமைப்பின் கூட்டாட்சி தத்துவத்தை வலியுறுத்தும் கோரிக்கை. திறமையான மாணவருக்கும் சமமான வாய்ப்பை வழங்க வேண்டும் என்பதற்கான கோரிக்கை. இந்த தீர்மானத்தை நான் கொண்டு வருவதில் ஒரு மருத்துவராக, நீட் தேர்வு எழுதாமல் மாநில சேர்க்கை முறைப்படி மருத்துவ படிப்பில் சேர்ந்து படித்த மருத்துவர் என்ற முறையிலும், ஐஆர்எஸ் படிப்புக்கு முன் ஐந்தரை ஆண்டுகள் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவராக பணியாற்றியவன் என்ற முறையில் பெருமையும், மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த தீர்மானத்தை ஒரு மனதாக நிறைவேற்றி தர அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

நீட் தேர்வில் இருந்து மாநிலத்திற்கு விலக்கு அளிக்கும் வகையில் 2021 ம் ஆண்டு தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவை (சட்ட முன்வடிவு எண் 43/2021) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை ஒருமனதாக நிறைவேற்றியிருந்தும், ஜனாதிபதியால் அச்சட்ட முன்வடிவுக்கு ஏற்பிசைவு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. நீட் தேர்வு முறை அகற்றப்பட வேண்டும் தொடர் வினாத்தாள் கசிவுகள் மற்றும் முறைகேடுகளால் நீட் (இளநிலை) 2026 தேர்வு ரத்து செய்யப்பட்டு மறுதேர்வு நடத்தப்பட்ட நிலையில், லட்சக்கணக்கான மாணவர்களுக்குச் சொல்லொணாத் துயரமும், இளம் மாணவர்கள் உயிரிழப்பும் ஏற்பட்டு, நாடு முழுவதும் உள்ள மாணவர்களின் நம்பிக்கையை இத்தேர்வு முறை முற்றிலும் இழந்துள்ளது.

எனவே, இத்தேர்வு முறை அகற்றப்பட வேண்டும். நீட் தேர்வுகளில் தொடர்ந்து நிகழ்ந்து வரும் முறைகேடுகளைக் கருத்தில் கொண்டு, நீட் நுழைவுத் தேர்வு முறையை ரத்து செய்யும் வகையில், 2019ம் ஆண்டு தேசிய மருத்துவ ஆணையச் சட்டம் (மையச் சட்டம் 30/2019), 2020ம் ஆண்டு இந்திய மருத்துவ முறைகளுக்கான தேசிய ஆணையச் சட்டம் (மையச் சட்டம் 14/2020) 2020ம் ஆண்டு ஹோமியோபதிக்கான தேசிய ஆணையச் சட்டம், (மையச் சட்டம் 15/2020) மற்றும் தொடர்புடைய பிற மையச் சட்டங்களில் தேவையான திருத்தங்களை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை ஒருமனதாக வலியுறுத்துகிறது. இதன் மூலம் மாணவர்கள் 12ம் வகுப்புத் தேர்வில் பெறும் மதிப்பெண்களின் அடிப்படையில் மாநிலத்தில் மருத்துவ மாணவர் சேர்க்கையை மேற்கொள்ள இயலும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த தீர்மானம் சட்டசபையில் ஏகமனதாக நிறைவேறியது.

பா.ஜ.க. வெளிநடப்பு

இந்த தீர்மானத்தின் மீது முதலில் பேசிய, பா.ஜ.க உறுப்பினர் போஜராஜன், இந்த தீர்மானத்தை எதிர்ப்பதாகவும், வெளிநடப்பு செய்வதாகவும் கூறி சபையிலிருந்து வெளியேறினார்.

இத்தீர்மானத்தின் மீதான விவாதத்தில் திமுக, அதிமுக, பாமக, கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் தேமுதிக உள்ளிட்ட பல்வேறு பிரதான அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் பங்கேற்றுத் தங்களது ஆதரவைப் பதிவு செய்தனர். அதிமுக, தி.மு.க. மற்றும் பா.ம.க. சார்பில் இந்த தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

டிவிஎஸ் சப்ளை செயின் சொல்யூஷன்ஸ் லிமிடெட்

TVS Supply Chain Solutions BELIEVE IN THE POWER OF US®

பதிவு அலுவலகம் - 10, ஜவகர் சாலை, சொக்கிக்குளம், மதுரை - 625002, தமிழ்நாடு , இந்தியா
தொலைபேசி எண் . 044 66857777 இ – மெயில் முகவரி - investor.relations@tvsscs.com
CIN: L63011TN2004PLC054655

30 ஜன் 2026, அன்றுடன் முடிவடைந்த ஒருங்கிணைந்த காலாண்டு தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

(மதிப்பு ₹ கோடியில் பங்கு விவரம் மற்றும் பிரத்யேகமாக குறிப்பிட்டுள்ளவை தவிர்த்து)

விவரம்	தனிப்பட்ட				ஒருங்கிணைந்த			
	முடிவடைந்த காலாண்டு			முடிவடைந்த நிதியாண்டு	முடிவடைந்த காலாண்டு			முடிவடைந்த நிதியாண்டு
	30.06.2026 (தணிக்கை செய்யப்படாதது)	31.03.2026 (தணிக்கை செய்யப்பட்டது)	30.06.2025 (தணிக்கை செய்யப்படாதது)	31.03.2026 (தணிக்கை செய்யப்பட்டது)	30.06.2026 (தணிக்கை செய்யப்படாதது)	31.03.2026 (தணிக்கை செய்யப்பட்டது)	30.06.2025 (தணிக்கை செய்யப்படாதது)	31.03.2026 (தணிக்கை செய்யப்பட்டது)
செயல்பாடுகளின் மூலம் மொத்த வருமானம்	623.86	606.35	498.50	2,125.23	3,348.83	3,042.67	2,601.05	11,040.76
குறிப்பிட்டுள்ள காலத்திற்கான வரிக்கு முந்தைய நிகர லாபம் (வழக்கத்திற்கு மாறான இனங்கள்)	10.59	16.07	4.86	32.96	32.13	30.92	194.76	274.13
வரிக்கு முந்தைய காலம் / வருடத்திற்கான நிகர லாபம் (விதிவிலக்கான பொருட்களுக்குப் பிறகு)	10.59	10.90	4.86	19.02	32.13	25.71	103.47	168.50
குறிப்பிட்ட காலத்திற்கான வரிக்கு பிந்தைய நிகர லாபம் (வழக்கத்திற்கு மாறான இனங்கள்)	7.96	9.89	3.30	19.90	22.48	18.36	71.16	117.02
குறிப்பிட்ட காலத்திற்கான முழுமையான வருமானம் (வரிக்கு பிந்தைய லாபம் மற்றும் வரிக்குப் பிந்தைய இதர முழுமையான வருமானங்களை உள்ளடக்கியது)	9.07	8.87	2.93	17.62	19.94	60.66	102.23	229.63
செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (ஒரு பங்கின் மதிப்பு ரூ.1/-)	44.15	44.15	44.15	44.15	44.15	44.15	44.15	44.15
ஒதுக்கீடுகள் (மறுமதிப்பீடு ஒதுக்கீடுகள் நீங்கலாக) முந்தைய வருட தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையின்படி				2,613.56				1,989.35
ஒரு பங்கின் வருவாய் (ஒவ்வொன்றும் ரூ.1/-) (காலாண்டு காலத்திற்கு வருடாந்திரமாக கணக்கிடப்படவில்லை)								
அடிப்படை நிலை (ஒரு பங்கின் மதிப்பு ரூ.1/-)	0.18	0.22	0.07	0.45	0.47	0.40	1.60	2.59
மாற்றியமைக்கப்பட்ட நிலை (ஒரு பங்கின் மதிப்பு ரூ.1/-)	0.18	0.22	0.07	0.45	0.47	0.40	1.59	2.59

குறிப்பு

1. இந்த நிதிநிலை அறிக்கையானது தணிக்கை குழுவால் ஆய்வு செய்யப்பட்டு இயக்குனர் குழுவால் 10, ஆகஸ்ட், 2026 அன்று நடைபெற்ற கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.
2. மேற்கண்ட சுருக்கமான நிதிநிலை அறிக்கையானது, பட்டியல் மற்றும் வெளியீடு குறித்த நிபந்தனைகள் தொடர்பாக (SEBI) அமைப்பு 2015 ஆம் ஆண்டு வழங்கியுள்ள வழிகாட்டுதலில் உள்ள விதிமுறை எண்.33 இன் படி கீழ் பங்குச் சந்தையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள காலாண்டு / முழு ஆண்டு தணிக்கை செய்யப்படாத முழு வடிவிலான நிதிநிலை அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்டது. ஜுன் 30, 2026 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் முழுவருட நிதி முடிவுகளின் முழு வடிவம் பங்குச் சந்தை வலைத்தளங்களான www.bseindia.com மற்றும் www.nseindia.com மற்றும் எங்கள் வலைத்தளமான www.tvsscs.com ஆகியவற்றில் கிடைக்கிறது

இடம் : சென்னை
நாள் : 11.08.2026

டிவிஎஸ் சப்ளை செயின் சொல்யூஷன்ஸ் லிமிடெட்டின் இயக்குநர்கள் குழுவிற்காகவும், அதன் சார்பாகவும்

Sd/-
விகாஸ் சத்தா
மேலாண்மை இயக்குநர்
DIN: 06624266

ராம்கோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 47, P.S.K. நகர், ராஜபாளையம் 626 108
கார்ப்பரேட் அலுவலகம்: ''ஆவ்ராஸ் கார்ப்பரேட் சென்டர்'', 98–ஏ, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, மயிலாப்பூர், சென்னை–4
CIN: L26943TN1965PLC005297; WEBSITE: www.ramcoindltd.com

30.06.2026ல் முடிந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்

(ரூ. கோடியில்)

	விவரங்கள்	முடிந்த காலாண்டு			முடிந்த ஆண்டு
		30.06.2026 தணிக்கை செய்யாதது	31.03.2026 தணிக்கை யானது	30.06.2025 தணிக்கை செய்யாதது	31.03.2026 தணிக்கை யானது
1	செயல்பாடுகள் மூலம் வருமானம்	613.81	501.83	531.52	1,792.22
2	காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்)	96.96	55.96	57.33	192.31
3	காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரிக்கு முன், விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	105.74	63.82	57.33	200.40
4	காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின், விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	79.21	47.76	45.82	135.63
5	சம பங்கு முறையை பயன்படுத்தி கணக்கிடப்பட்ட துணை நிறுவனங்களுக்கு வரிக்கு பின் (PAT) நிகர லாபத்தின் பங்கு	7.38	39.87	19.81	170.63
6	காலத்திற்கான விரிவான மொத்த வருமானம் (வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் மற்றும் வரிக்கு பின், இதர விரிவான வருமானம் உள்ளடக்கியது)	84.07	61.04	80.46	291.42
7	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம்	8.66	8.66	8.66	8.66
8	இதர ஈக்விடி				4,513.31
9	பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் ஒன்றின் மதிப்பு ரூ.1/– (ரூ.)(வருடாந்திரமல்ல) அடிப்படை : பலமிழந்தது:	10.00 10.00	10.12 10.12	7.58 7.58	35.36 35.36

தனியான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் முக்கிய தகவல்

விவரங்கள்	முடிந்த காலாண்டு			முடிந்த ஆண்டு
	30.06.2026 தணிக்கை செய்யாதது	31.03.2026 தணிக்கை யானது	30.06.2025 தணிக்கை செய்யாதது	31.03.2026 தணிக்கை யானது
செயல்பாடுகள் மூலம் வருமானம்	531.38	397.21	463.57	1,443.50
காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	60.00	26.16	32.58	111.26
காலத்திற்கான விரிவான மொத்த வருமானம் (வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் மற்றும் வரிக்கு பின், இதர விரிவான வருமானம் உள்ளடக்கியது)	57.67	1.56	46.72	99.03

குறிப்புகள்:

1. தேவையானதாக கருதப்படும் இடங்களில் கடந்த கால கணக்குகள் ரீ குரூப் செய்யப்பட்டு/மறுவகைப்படுத்தப்பட்டுள்ளது.
2. மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள், செபி (பட்டியலிடுதல் மற்றும் பிற வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015–ன் விதி 33 மற்றும் விதி 52–ன் கீழ் பங்குச் சந்தைகளில் தாக்கல் செய்யப்பட்ட காலாண்டு நிதி முடிவுகளின் விரிவான வடிவத்தின் ஒரு சுருக்கமாகும். நிதி முடிவுகளின் முழுமையான வடிவம், பம்பாய் பங்குச் சந்தை இணையதளத்திலும் (URL: www.bseindia.com/corporates), தேசிய பங்குச் சந்தை இணையதளத்திலும் (URL: www.nseindia.com/corporates) மற்றும் நிறுவனத்தின் வலைத்தளத்திலும் (URL: www.ramcoindltd.com) கிடைக்கும். நிதி முடிவுகளின் முழு வடிவத்தை, கீழே வழங்கப்பட்டுள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலமும் பெறலாம்.

இடம் : சென்னை
தேதி : 10.08.2026

ராம்கோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டுக்காக
P.V. அபினவ் ராமசுப்பிரமணியம் ராஜா
நிர்வாக இயக்குனர்
DIN : 07273249

தரணி ஃபைனான்ஸ் லிமிடெட்

CIN: L65191TN1990PLC019152
பதிவு அலுவலகம் : 'PGP ஹவுஸ்' எண். 59 (பழைய எண். 57) ஸ்டெர்லிங் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை - 600 034. தொலைபேசி - 044 28311313, இமெயில் : secretarial@dharanifinance.com
வலைதளம் : www.dharanifinance.com

30-06-2026 அன்றுடன் முடிந்த காலாண்டுக்கான தனிப்பட்ட தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் பற்றிய அறிவிப்பு

(ரூபாய் லட்சங்களில் except EPS)

வ. எண்	விவரங்கள்	முடிந்த காலாண்டு 30-06-2026 (த.ஆகாதது)	முடிந்த காலாண்டு 31-03-2026 (த.ஆனது)	முடிந்த காலாண்டு 30-06-2025 (த.ஆகாதது)	முடிந்த ஆண்டு 31-03-2026 (த.ஆனது)
1.	செயல்பாடுகளில் இருந்து மொத்த வருமானம்	42.02	34.26	35.99	139.81
2.	நடப்பு காலத்துக்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரிவிலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு முந்தையது)	26.74	9.04	21.90	81.07
3.	வரிக்கு முன் நடப்பு காலத்துக்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரி விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது)	26.74	9.04	21.90	81.07
4.	வரிக்கு பின் நடப்பு காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது)	20.35	13.22	16.43	55.46
5.	இதர விரிவான வருமானம் (நிகர வரி)	-	(0.68)	-	(0.68)
6.	நடப்பு காலத்திற்கான மொத்தம் விரிவான வருவாய் (நடப்பு காலகட்டத்திற்கான லாபம் / (நஷ்டம்) (வரிக்குப் பிறகு) மற்றும் பிற விரிவான வருமானம் (வரிக்குப் பிறகு) ஆகியவற்றை உள்ளடக்கியது)	-	(0.68)	-	(0.68)
7.	சமபங்கு மூலதனம் முகமதிப்பு பங்கு ஒன்றுக்கு ரூ. 10/-	499.72	499.72	499.72	499.72
8.	முந்தைய ஆண்டின் தணிக்கை செய்யப்பட்ட பேலன்சீட்படி இதர சமபங்குகள் (மறு மதிப்பீடு ரிசர்வுகள் நீங்களாக)	-	-	-	503.41
9.	பங்கு வருவாய் (தலா ரூ. 10/-) தொடர்ச்சியான மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகளுக்கு)				
	(a) அடிப்டை	0.41	0.26	0.33	1.11
	(b) திட்பம் குறைந்தது	0.41	0.26	0.33	1.11

குறிப்புகள்: (1) மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் தணிக்கைக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, ஆகஸ்ட் 10, 2026 அன்று நடைபெற்ற நிறுவனத்தின் இயக்குநர்கள் குழு கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது. தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் குறித்து சட்டப்பூர்வ தணிக்கையாளர்கள் மாற்றியமைக்கப்பட்ட கருத்தை வெளியிட்டுள்ளனர்.

(2) தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள், நிறுவனங்கள் சட்டம், 2013 இன் பிரிவு 133 இன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட இந்திய கணக்கியல் தரநிலை (Ind AS) 34 - இடைக்கால நிதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகாரம் மற்றும் அளவீட்டுக் கொள்கைகளின்படியும் இந்தியாவில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பிற கணக்கியல் கொள்கைகளின்படியும், பொருந்தக்கூடிய அளவிற்கு தயாரிக்கப்பட்டுள்ளன.

(3) நிறுவனம் ஜூலை 4, 2017 அன்று M/s. ஆர்யவ் எக்ஸ்போர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு 200 லட்சம் ரூபாய்க்கான இன்டர்-கார்ப்பரேட் டெபாசிட்டை (ICD) வழங்கியுள்ளது. இருப்பினும், இன்றுவரை நிறுவனம் ICD மீதான வட்டியைப் பெறவில்லை. எனவே, ஜுன் 30, 2026 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான கணக்குப் புத்தகங்களில் ICD மீதான திரட்டப்பட்ட வட்டி எதுவும் அங்கீகரிக்கப்படவில்லை. இது தணிக்கையாளர்களின் மாற்றியமைக்கப்பட்ட கருத்து.

(4) மேற்கூறிய கடன்களில் பெறப்பட்ட கடன்கள் மற்றும் முன்பணங்கள் மீதான திரட்டப்பட்ட வட்டி நிலுவையில் உள்ள மதிப்புகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இருப்பினும், விவேகமான விதிமுறைகளின் அடிப்படையில் கணக்குப் புத்தகங்களில் எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. வாடிக்கையாளருடனான கலந்துரையாடல்களின் அடிப்படையில், குறிப்பிட்ட வாடிக்கையாளரிடமிருந்து பெறப்பட்ட நிலுவைத் தொகையை முழுமையாகத் திருப்பிச் செலுத்த எதிர்பார்க்கப்படுகிறது என்று நிர்வாகம் கருதுகிறது. இது தணிக்கையாளர்களால் மாற்றியமைக்கப்பட்ட கருத்து.

(5) நிறுவனம் வங்கி சாரா நிதி நிறுவனங்களின் (NBFC) செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ளது. நடப்பு மற்றும் முந்தைய நிதியாண்டுகளில், நிறுவனம் NBFC செயல்பாடுகளில் மட்டுமே ஈடுபட்டுள்ளது. Ind AS 108 - செயல்பாட்டுப் பிரிவுகளின்படி, நிறுவனம் ஒரே ஒரு அறிக்கையிடக்கூடிய பிரிவை மட்டுமே அடையாளம் கண்டுள்ளது, அதாவது NBFC செயல்பாடுகள். ஏனெனில் வேறு எந்த பிரிவுகளும் அந்த அளவுகோல்களை பூர்த்தி செய்யவில்லை, தனி அறிக்கையிடலுக்கு, கூடுதல் பிரிவு வெளிப்பாடுகள் தேவையில்லை.பிரிவு வெளிப்பாடுகள் தேவையில்லை.

இடம் : சென்னை
நாள் : 10-08-2026

நிர்வாக குழு உத்தரவின்படி
தரணி ஃபைனான்ஸ் லிமிடெடுக்காக
ஒப்பம்/-
Dr. பழனி G பெரியசாமி
தலைவர் -
DIN 00081002

குடும்ப நீதிமன்றம் 1, திருவள்ளூர்
H.M.O.P.No. 57 of 2026

V. சரத்குமார்,
S/o. வெங்கடேஷ்,
எண். , ராமபுரம், தடா,
திருவள்ளூர்
... மனுதாரர்

எதிர்

M. பவானி,
D/o. முருகவேல்,
எண். 15, ஈராம் நகர்,
ராமபுரம், பட்டூர்
திருவள்ளூர் – 602 025
... எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மேல்முறையீட்டாளர் எதிர் மனுதாரர் அவர்களுக்கு எதிராக மாண்பமை குடும்ப நீதிமன்றம் 1, திருவள்ளூர் வழக்கு தொடர்ந்து அவ்வழக்கானது மேற்படி H.M.O.P. No. 57 of 2026 நீதிமன்றத்தில் பதிவாகி நிலுவையில் உள்ளது. மேலும் மேற்படி வழக்கில் மேற்கூறிய எதிர்மனுதாரர் M. பவானி, D/o. முருகவேல், எண். 15, ஸ்ரீராம் நகர், ராமபுரம், புட்லூர், திருவள்ளூர் – 602 025. என்ற முகவரியில் வசிக்கும் தங்களின் வருகைக்காக மேற்படி நீதிமன்றத்தால் வருகின்ற 27.08.2026 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. எனவே அன்றைய தினம் காலை 10.30 மணிக்கு தாங்களோ அல்லது தங்கள் வழக்கறிஞர் மூலமாகவோ மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராகி மேற்படி வழக்கில் தங்கள் ஆட்சேபணையை தெரிவித்து கொள்ளலாம். தவறும் பட்சத்தில் மேற்படி வழக்கில் மேற்படி நீதிமன்றம் தங்களுக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்க நேரிடும் என்பதை இதன் மூலமாக தெரிவித்து கொள்கிறேன்.

M. சிவக்குமார்,
மனுதாரர் தரப்பு வழக்கறிஞர்